www.tamilarangam.net

# நமது குரல்



## மார்ச்-8 மகளிர் தினம்







Nummer 59 Freitag, 10. März 1989 WAZ

## Frauentag sorgt für lilafarbenen Wirbel

### Forderungskatalog für Ausländerinnen

HERNE. Auch in Herne sorgte der Internationale Frauentag für einigen Wirbel: Gerüstet mit lila Luftballons und mehrsprachigen Transparenten zogen am Mittwoch morgen 50 in- und ausländische Frauen durch die Innenstadt zum Herner Ausländer- und Einwohnermeldeamt. Dort überreichten sie Stadtamtsleiter Erwin Franz und seinem Vertreter Wolfgang Trieselmann einen detaillierten Forderungskatalog über die notwendigen Schritte zum Abbau der Ungleichbehandlung von Mann und Frau.

**மாதர் தம்மை இழிவு செய்யும்**
**மடமையைக் கொளுத்துவோம்**

பங்குனி

வெளியீடு 14

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| நாம் சிறிது பேசுவோம் | --- | 3 |
| மகளிர் தினம் | --- | 5 |
| கலகத்தின் முடிவில் | --- | 9 |
| வேண்டாம் சமாதானம் | --- | 16 |
| சிறுவர் களஞ்சியம் | --- | 17 |
| சிந்திப்போமா | --- | 20 |
| சித்ரா - பெண் | --- | 24 |
| களம் | --- | 28 |
| ஐ.பெ.ஐ. விற்பனை | --- | 31 |
| வாசகர் கடிதங்கள் | --- | 33 |



kirchenkreis Herne



INFORMATION ZENTRUM · DRITTE WELT

Arbeitsstelle für Frieden Gerechtigkeit und Bewahrung der Schöpfung
Overweg str 31
4690 Herne 1.
tel: 02323 496970/74


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இருந்து பேசுவோம்

## ஆர்ப்பாட்டமும் ஊர்வலமும்

சனநாயக ரீதியில் கொள்கைகளையும் உரிமைகளையும் நிலைநாட்டுவதற்காக சனம் திரளும் போது உண்டாவது அணி. அந்த அணி தமது நிலைப்பாடுகளை வெளிக்காட்ட முற்படும்போது ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் தோன்றுகின்றன. அகிம்சையாக இடம் பெறும்போது வரவேற்படுகின்றன; இம்சையாகும் போது தடுக்கப்படுகின்றன.

சனநாயக நாட்டில் ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் அனுமதிபெற்று நடாத்தப்படும்போது குற்றமாகக் கருதப்படுவதில்லை. இந்நாடுகளில் தமிழர் பிரச்சினைகளை வெளிக்காட்டுவதற்காக ஆங்காங்கே சிற்சில ஊர்வலங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இவற்றையிட்டு பலருக்கும் சிலவிதமான ஐயப்பாடுகள். தமிழர் பிரச்சினைகளை, ஊர்வலங்கள் மூலமாக கிளறுவதனால் தமிழ் அகதிகள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டு விடுவோமா என்ற மூடநம்பிக்கை கலந்த சந்தேகம் எம்மவர்களுக்குள் வதந்தியாகப் பரவியுள்ளது.

இது முற்றிலும் தவறான சந்தேகம்! இந்த சந்தேகத்தை யாரும் எவருக்கும் தெளிவுபடுத்துவதில்லை. இங்குள்ள பலரும் தாங்களும் தங்கள் பாடும் என்றவாறாக நடந்து கொள்கிறார்கள் என்பதுதான் காரணம்.

குழந்தை தனது உணர்வுகளை அழுகைமூலம் வெளிக்காட்டுவது அசிங்கமல்ல. ஊமை தனது பிரச்சினைகளை சைகைமூலம் புரியவைப்பது வெட்கக்கேடானது அல்ல, இதுபோல் தங்களுக்குள் உருவாகி விசுவரூபம் எடுக்கும் உரிமை பிரச்சினைகளை தீர்க்கக்கோரி வெளியுலகுக்கு எடுத்துக்காட்ட ஆர்ப்பாட்டமும் ஊர்வலமும் எடுப்பது எந்த விதத்திலும் எவருக்கும் தீங்காகாது.

இந்நாட்டின் பலபாகங்களிலும் தங்களது உரிமை மறுக்கப்படும்போது நீதிமன்றத்தில் வழக்கு தாக்கலாக்கி வென்றிருக்கிறார்கள்.

உதாரணத்திற்குச் சில; 'போகும் நகர வாழ் அகதிகள் குடும்பங்களுக்கு தனி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1985இன் நடுப்பகுதியில் சமூக உதவிப்பணம், ஜெர்மனியருக்கு வழங்கப்படும் தொகையே தங்களுக்கும் தரப்பட வேண்டும் என்று கையெழுத்திட்ட மகஜர் ஏற்கப்பட்டு, அதன்படி போகும் நகரில் முதன்முதலாக அந்த சமூக உதவிப் பணம் கூட்டிக் கொடுக்கப்பட்டது.

குழந்தையின் பராமரிப்பு பணமாக மாதாந்தம் 600,- மார்க் வழங்குவது அகதி அந்தஸ்து ஏற்கப்படாத அகதிகளுக்கு ஆரம்பத்தில் மறுக்கப்பட்டது. போகும் நகரின் ஒரு அன்பர் அதனை எதிர்த்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்து இப்போது சகலருக்கும் பணம் வழங்கப்படுகிறது.

படிப்பு விடயத்திலும் டோர்ட்முன்ற் இல் ஒருவர் நீதிமன்றத்தில் வெற்றி பெற்று படிப்பைத் தொடர்கிறார். பொன். இல் அடிக்கடி அரசியல் ஆர்ப்பாட்டங்கள் நடக்கின்றன. இவர்கள் அரசாங்கத்தின் தடைகளை எதிர்த்தவர்கள் என்று நாடுகடத்தப்படவில்லையே! இவை எம்மவர்கள், மற்றவர் மீது அவமானத்தை ஏற்படுத்தவில்லையே! மீபெரும் பிரயோசனங்களைதான் பெற்றிருக்கிறார்கள்.

---

அகதிகளின் வாய்ப்புகளை நசுக்குவதுபோல் அடிக்கடி இங்கு சட்டங்கள் மாற்றப்படுகின்றன. இதனை எவரும் விமர்சிக்காததல் நசுக்குதலும் கூடுகிறது. தற்போது அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பிப்பவருக்கு நீதிமன்றத்தில் தோற்று மலே தீர்வு வழங்கும் நிலைமை வந்துள்ளது. குட்டக் குட்ட குனியும் இந்நிலை தொடருமானால் தமிழ் அகதிகளை பொருளாதார அகதிகள் என்ற பட்டம் சூட்டும் நாள் தூரமில்லை. ஏனோதானோ என்று இருக்காமல், இந்நாட்டின் சட்டபூர்வமான அமைப்புகளுடன் சேர்ந்து எமது பிரச்சினைகளையும் உரிமைகளையும் வென்றெடுப்பதில் ஆங்காங்கே கரிசனை காட்டப்பட வேண்டும். போராட்டங்களில் சந்தேகம் கொள்பவர்களுக்கு, தெளிவு ஏற்படுத்தப்பட வேண்டும்.

o o o o o o o o o o o o o o o o o

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மார்ச்-8 மகளிர் தினம்







## சர்வதேச பெண்கள் தினம்

உலகமெங்கும் மார்ச் மாதம் 8ம் திகதி சர்வதேச பெண்கள் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதையொட்டி கேர்னே நகரிலுள்ள ஜேர்மன் வெளிநாட்டுப் பெண்கள் அமைப்புகளை ஒன்று சேர்த்து இத்தினத்தைச் சற்று வித்தியாசமான முறையில், ஜேர்மனியில் வசிக்கும் வெளிநாட்டுப் பெண்களின் பிரச்சனைகளை இந்நாட்டு மக்களுக்கு எடுத்து காட்டும் வகையில் ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

காலை 10.00 மணியளவில் கேர்னே குறொட்ச் கியர்ச விலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகியது. இலங்கை,



மகஜர் – மிக முக்கியமாக வெளிநாட்டுப் பெண்களுக்காக கேர்னே வெளி நாட்டவர் அலுவலகத்திடம் பெண்கள் பிரதிநிதி குழுவால் கையளிக்கப் பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜேர்மன், ஈரான், துருக்கி, கென்யா, பிலிப்பைன்ஸ் போன்ற நாட்டுப் பெண்கள் இதில் கலந்து கொண்டனர்.

வெளிநாட்டுப் பெண்களைத் திருப்பி அனுப்ப வேண்டாம், அரசியல் தஞ்ச உரிமைகளை வழங்க வேண்டும், வெளிநாட்டவருக்கு எதிரான சட்டத்தை நீக்க வேண்டும். வேலை அனுமதி வழங்க வேண்டும். என்ற கோரிக்கைகளைத் தாங்கிய அட்டைகளை கழுத்தில் அணிந்தவண்ணம் பான்கொவ் வீதியாகச் சென்ற ஊர்வலம் வெளிநாட்டவர் காரியாலயத்தைச் சென்றடைந்தது. அங்கு பொறுப் பதிகாரி திரு டிரீசிமன் இடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரைப் பெண் களின் சார்பில் திருமதி மோனிகா புஸ்மன் கையளித்தார். குடிசனப் பதிவு காரியாலயத்தவரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

இதையடுத்து மாலை 6.00 மணியளவில் மூன்றாம் உலக நாடுகள் தக வல் நிலையத்தில் பெண்கள் விழா நடைபெற்றது. கோர்டுலா வோல்கர் இன் பெண்களை எழுச்சி பெறவைக்கும் கருத்துக்களைக் கொண்ட பாடல்களைப் பாடினர்.

சலங்கை ஒலி நாட்டியக்கலாமன்ற மாணவிகளின் பரத நாட்டிய நிகழ்ச்சியும் துருக்கிய சிறுமிகளின் நடனமும் சிறப்பு நிகழ்ச்சிகளாக நடைபெற்றன.

— டி.கே. —

ஆறுவார காலத்தில் தனியாக 550 சிறுவர்கள் ஜேர்மனிக்குள் தஞ்சம் கேட்டு வந்துள்ளார்கள். இதில் 440 இலங்கைச் சிறுவர்கள் அடங்குவர். 6மாத காலத்தில் 580 இலங்கைச் சிறுவர்கள் தனியாக வந்துள்ளதாக பிராங்கோர்ட் விமான நிலைய கவிப்பை சீ.டி.யு பிரமுகர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தியப்படையினரால் தனியாக அல்லது குடும்பமாகத் தாக்கப் பட்டதை தாங்க முடியாமல் இங்கு வந்ததாக இச் சிறுவர் கள் காரணம் கூறுகிறார்கள்.

— உவாட்ச் 17.2.89 —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஊதா நிறச் சுழற்சியை பெண்கள் தினம் உருவாக்கியது

வெளிநாட்டுப் பெண்கள் பற்றிய மகஜர் கேர்னே – 1

Nummer 59 Freitag, 10. März 1989 WAZ

### Frauentag sorgt für lilafarbenen Wirbel

#### Forderungskatalog für Ausländerinnen

**HERNE. Auch in Herne sorgte der Internationale Frauentag für einigen Wirbel: Gerüstet mit lila Luftballons und mehrsprachigen Transparenten zogen am Mittwoch morgen 50 in- und ausländische Frauen durch die Innenstadt zum Herner Ausländer- und Einwohnermeldeamt. Dort überreichten sie Stadtamtsleiter Erwin Franz und seinem Vertreter Wolfgang Trieselmann einen detaillierten Forderungskatalog über die notwendigen Schritte zum Abbau der Ungleichbehandlung von Mann und Frau.**

Den Schwerpunkt des Katalogs bilden dabei die Anliegen der in Herne lebenden Ausländerinnen, da gerade sie doppelt betroffen sind von täglichen Benachteiligungen: Nicht nur ihre Nationalität, auch ihre Rolle als Frau erschwert ihnen die Wahrnehmung zahlreicher Rechte.

So ist insbesondere ihre Aufenthaltssituation in Deutschland Stein des Anstosses. Denn zu den üblichen Ausweisungsgründen fur Auslander kommen bei den Frauen noch die Trennung vom Partner oder dessen Tod hinzu. An erster Stelle des Katalogs stand daher die Forderung nach einem eigenständigen Aufenthaltsrecht fur ausländische Frauen.

Auch in diesem Jahr war die Resonanz in Herne unerwartet groß. Allein zu dem abendlichen Fest, das in Zusammenarbeit von Frauenorganisationen und -bündnissen veranstaltet wurde, kamen rund 60 Frauen samt ihren Kindern. Mit Musik, Tanzdarbietungen und kulinarischen Genüssen aus den verschiedensten Ländern beendeten sie ihren Tag auf unterhaltsame Weise. Auch die abschließenden Lieder von Kordula Volker nahmen Abstand von zu verbissenen feministischen Parolen.

ஒருசில சுழற்சிகளுக்கு கேர்னே சர்வதேச பெண்கள் தினம் பங்களித்தது. பல மொழி சுலோக அட்டைகள் ஊதா நிற பலூன்களுடன் புதன் காலை ஐம்பது உள்–வெளி நாட்டுப் பெண்கள் நகர் மையத்தினூடாக கேர்னே வெளிநாட்டு நகர் வாசப் பதிவு அலுவலகத்தை வந்தடைந்தனர்.

நகரசபை அதிகாரி எர்லிர் பிரன்ஞ் அவரது பிரதிநிதி வோல்ப் கங் ட்ரிசில்மன் ஆகியோரிடம் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயான ஏற்றத்தாழ்வுகளான கவனிப்புகளை அகற்றும் முக்கிய படிகளாக விரிவான விண்ணப்பம் கொடுக்கப்பட்டது. அதில் கேர்னே வாழ் பெண்கள் பிரச்சினைகள் முக்கிய பகுதியாக இடம் பெற்றது.

இவர்கள் நாளாந்த பிற்போக்குகளால் இருமடங்கு பாதிக்கப்படுவதால், இவர்கள் நாட்டை சேராதவர் மட்டுமன்றி, பெண்களாக இருப்பதலும் இவர்களது உரிமைகள் பல பறிபோயுள்ளன.

மேற்கு ஜேர்மனியில் இவர்களது தங்கும் உரிமை, இவர்களது பிரச்சினைகளில் மூலைக்கல்லானது. வழக்கமான நாடு கடத்தலுக்குரிய உத்தரவு காரண

www.tamilarangam.net

ங்கள், இவர்களது துணைவரின் பிரிவு அல்லது அவரது மரணமும் இவர்கள் விடயத்தில் மேலதிகமாக சேர்க்கப்படுகிறது. இதுவிடயமாக மகஜரில்;

முதலாவது சுயாதீன தங்கும் உரிமை பெண்களுக்கு வழங்குக என்ற கோரிக்கை இடம் பெற்றது.

இந்த வருடமும் எதிர்பார்த்ததை விட கூடியளவு ஆதரவு கேர்லேயில் இருந்தது. பெண்கள் சங்கங்களும் இயக்கங்களும் இணைந்து நிகழ்த்திய மாலை விழாவில் ஏறத்தாழ 60 பெண்கள் தமது பிள்ளைகளுடன் வந்திருந்தனர்.

பல நாட்டு உணவுப் பண்டங்கள், இசை, நாட்டிய நிகழ்ச்சி என்பவற்றுடன் கொண்டாட்ட வடிவில் அவர்களது நாளை முடித்தனர்.

— தமிழாக்கம்— பீற்றர் ஜெயரட்ணம் —



"என்ரை அவருக்கு இன்னமும் சின்னப்பிள்ளைத் தனந்தான்!. "

"ஏன்? "

"அவர் 'கிண்டர் பியர்' தான் வேணும் என்டு அடம் பிடிக்கிறார்"

— சங்கீ —

## சுறுசுறுப்பான தொழிலாளர்!

உலகிலேயே, சிங்கப்பூர் தொழிலாளர்கள்தான் சிறந்த தொழிலாளர்கள் என்று சர்வதேச ஆய்வு கூறுகிறது.

தொழில் வளர்ச்சி அடைந்துள்ள 48 நாடுகளில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதில், சிங்கப்பூர் தொழிலாளர்கள் முதல் இடத்தையும் சுவிட்சர்லாந்து தொழிலாளர் இரண்டாவது இடத்தையும் தைவான், ஜப்பான் தொழிலாளர் மூன்றாவது இடத்தையும் தென்கொரியா தொழிலாளர் நாலாவது இடத்தையும் வகிக்கிறார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கலக்கத்தின் முடிவில் — காசி

பரதன் கண்களை இறுக மூடிக்கொண்டு "ராமஜெயம்...ராமஜெயம்..." என்று வாய்க்குள் முணுமுணுத்தவாறே, மனமுருகி இராமபிரானைத் துணைக்கு அழைத்தபடி விமானத்துக்குள் உட்கார்ந்திருந்தான்.

விமானம் 'விர்' என்று காற்றைப் பிளந்து கொண்டு வானிற் பறந்து கொண்டிருந்தது. விமானத்திலிருந்து வெளியுலகத்தைப் பார்த்து அவனுக்கு அலுத்து விட்டது. இது வெளிநாடு செல்வதற்காக அவன் மேற்கொண்ட ஏழாவது பயண மாகும். முதல் ஆறு பயணங்களும் திருப்பி அனுப்பப்பட்டதும், ஏஜென்சிக்காரர் ஏமாற்றியதுமாகப் படுதோல்வியில் முடிந்தன. இருந்த காணி, பூமி, நகைநட்டு எல்லாவற்றையும் விற்றும், இன்னும் மூன்று இலட்சம் கடன் மலைபோல் வளர்ந்து விட்டது. இது அவனின் இறுதிமுயற்சி. தன்னுயிரைப் பணயம் வைத்து அவன் மேற் கொண்டகடைசி முயற்சி. பயணத்துக்கு முன் திருநெல்லை கோவிலுக்குச் சென்று "நான் எத்தனையோ தவறுகள் செய்திருக்கின்றேன், அதற்குத் தண்டனை கொடுப் பதென்றால் வேறு ஏதாவது உருவத்தில் கொடு நான் பிரான்ஸ் நாட்டுக்குப் போய் சேரவேண்டும். நான்பட்ட கடனை அடைக்க மட்டுமாவது, அங்கு நான் இருந்து உழைக்கவேண்டும். இதற்கு நீ உதவவேண்டும். இந்தத் தடவையும் என்பயணம் தோல்வியுறுமானால் இந்தக் கோவிலில் நீ இல்லை; இதுவரைநான் கும்பிட்டது கடவுளும் அல்ல, வெறுங்கருங்கல் என்பது முடிவாகிவிடும். இதற்குப் பிறகு நான் இருந்தென்ன? செத்தென்ன? எது வேண்டுமென்றாலும் நடந்துவிட்டுப் போகட்டும்.." என்று மனதிற்குள் வேண்டியவாறு புறப்பட்டிருந்தான்.

பரதனுக்கு வயது இருபத்தெட்டு. ஆடாத ஆட்டங்களாடி, செய்யாத சேட்டைகள் செய்து இப்போ திருந்தி, குடும்பப்பாரத்தைத் தன் தலைமேற் தாக்கிக் கொண்டான். ஆனால் செல்லும் பாதைதான் அவனுக்குப் புரியவில்லை. அவன் எங்குபோனாலும் கதவுகள் அடைத்தே கிடந்தன.

தகப்பன் இளைப்பாறிய சங்கக்கடை மனேஜர், தாம் ஏதோ மாறிக் கீறி கஞ்சியோ, கூழோ காய்ச்சி குடும்பத்தின் வயிற்றெரிவைத் தணிக்க முயன் றார். அவனுக்கு மூத்தது இரண்டு; இளையது நான்கு என்று எல்லோரும் சகோ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தரிகள். இரண்டுபேர் திருமணம் செய்து போய்விட்டார்கள். மற்ற நான்கு பேரும் திருமணத்திற்காகக் காத்து நிற்கிறார்கள். அதற்குத் தமிழ்ச் சமுதாயத்தின் மத்தியிலே விடமாகக் கலந்திருக்கும் "சீதனம் என்ற வழக்கம் தடைக் கல்லாகக் குறுக்கே வீழ்ந்து கிடந்தது. "சீதனத்தை ஒழிப்போம்" என்ற கோஷங்கள் கேட்கின்றனவே தவிர, அது ஒழிவதாகத் தெரியவில்லை. இலட்சம், இலட்சம் என்று வளர்ந்து கொண்டே இருக்கிறது. உள்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாடுகளில் வாழும் தமிழ் சமுதாய மத்தியிற்கூட இந்தக் கொடிய பழக்கம் தாவியிருக்கின்றது.

பரதனுடன் மேலும் முப்பது இளைஞர்களையும் சுட்டிக்கொண்டு ஏஜென் சிக்காரர் புறப்பட்டிருந்தார். விமானம் வெளிக்கிட்டு இரண்டு மணிநேரங்கள் கடந்து விட்டன. பலர் நித்திரையாகி விட்டிருந்தனர். பரதனுக்கு நித்திரை வரவில்லை. கண்கள் விழித்திருக்க மூத்த அக்கா கமலா, அவன் பயணத்துக்கு முன், அவனுக்குக் கூறிய கடைசி வார்த்தைகளை நினைத்தான்.

"தம்பி, பயப்படாதே. முயற்சி திருவினையாக்கும். நாம் இலக்கு நோக்கிப் பலமுறை குறிவைக்கும்போது ஏதோஒரு முறை எமது குறி தப்பாமல் இலக்கினை அடைவது திண்ணம். இம்முறை நிச்சயம் உனது பயணம் வெற்றியடையும். கவலைப்படாதே!"

"முதல் ஆறு தடவைகளும்கூட நான் இப்படித்தான் நினைத்தேன். ஆனால் தோல்விதான் ஒழுங்காகக் கிடைத்தது." என்றான் பரதன்.

"விதியே உனக்குக் குறுக்கே வந்து தடுத்தாலும், இம்முறை அது நடக்காது. விதியையும் வெல்லக்கூடிய ஒருவர் உனக்கு உதவியாக இருப்பார்".

"யாரவர்?"


"அது உனக்குத் தேவையில்லை. உன்னை அவருக்குத் தெரியும். சந்திக்க வேண்டிய இடத்தில் உன்னை வந்து சந்திப்பார்." என்று கூறிய கமலா, அவன் விமான ரிக்கற்றை வாங்கி, அதிலிருந்து சில விபரங்களைக் குறித்துக்கொண்டு ரிக்கற்றைத் திருப்பிக் கொடுத்தாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பரதனுக்கு கமலா கூறிய வசனங்கள் நினைவுக்கு வர, அவனுக்கு தான் ஏழு வருடங்களுக்கு முன்செய்ததவறும்; அழகும், கலகலப்புமாக இருந்த அவள் தன்னால் இன்று இருக்கும் நிலையும் அவன் மனக்கண்முன்னே விரிந்தன.

கமலாவும், திலீபனும் மக்கள் வங்கி ஒன்றில் ஒன்றாகவே வேலை செய்தார்கள். சந்தர்ப்பங்கள் அவர்களை நெருங்க வைத்தபோது, உள்ளங்கள் ஒன்றையொன்று முழுதாக அணைத்துக் கொண்டன. அவன் மழைமேகமானான், அவள் அழகு மயிலாகத் தோகை விரித்து நடனமாடினாள். அவள் வனப்புமிகு மலர்ச் சோலையானாள், அவன் தென்றலாகி அவளைத் தொட்டுத் தாலாட்டினான். அவன் மரமானான், அவள் நிழலானாள். பூமியாக அவன் கிடந்தான், அவள் நதியாக அவன்மீது தவழ்ந்தாள். வசந்தகாலமாக அந்த நாட்கள் விரிந்த போது, அதனை வளரமுடியாமல் இடியும், கொடுமழையும், கடும்புயலுமாக பரதன் என்ற தம்பி வடிவில் வந்து அறுத்தன.



"சின்னச் சாதிப்பயல் எங்கள் அக்காவைக் காதலிப்பதா?" பரதன் அடுப்பை மூட்டினான்; அது பற்றி எரிந்தது. தகப்பன், தாய், மாமன், மச்சான் என்று எல்லோரும் கூடி கமலாவின் காதலை பிரிவு என்னும் கூர்வாள் கொண்டு அறுத்து விட்டு, தூரத்து உறவால நடேசனுக்குத் திருமணம் நிச்சயித்தார்கள்.

விடிந்தால் திருமணம், ஆக வேண்டிய ஒழுங்குகளைச் செய்துவிட்டு, எல்லோரும் சற்றுப் படுத்து ஓய் வெடுத்துக் கொட்டிருந்தனர். இந் நேரத்தை சாதகமாக வைத்து, கமலா திலீபனுடன் செல்லப் புறப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டாள். இதனை எதிர்பார்த்த திலீபனும் அவளுக்காக சைக்கிளுடன் காத்து நின்றான். அவள் வந்ததும், அவளை ஏற்றிக்கொண்டு அயலூர் நண்பன் வீட்டுக்குச் சைக்கிளில் விரைந்து சென்றான்.

காலம் விடவில்லை, விதி குறுக்கே வந்தது. பரதன் விழித்துக் கொண்டான். கமலாவைக் காணவில்லை என்றதும் அடிதடிக்கு ஆயத்தமாக ஆட்களையும் கூட்டிக் கொண்டு காரில் புறப்பட்டான். விதி வென்றது. காதல் தோற்றது. திலீபனைப் பரதனின் ஆட்கள் தோய்த்தெடுத்தார்கள். கமலா கெஞ்சினாள். முடியாத நிலையில் தற்கொலை செய்யக் கிணற்றுக்குள் விழுந்தாள்; எதுவும் பலிக்கவில்லை. இரத்தக் காயங்களுடன் திலீபன் வைத்தியசாலையில் படுத்திருந்தான். கமலாவுக்குத் திருமணம் நடந்தது. கணவன் என்ற பெயரில் நடேசன் என்ற பொம்மை. கல்யாணம் செய்ததற்கு அத்தாட்சியாக ஐந்து குழந்தைகள். அவள் உழைப்பில் தான் குடும்பமே தங்கியிருந்தது. நடேசனுக்கு வேலையில்லாவிட்டாலும் பரவாயில்லை, ஒழுங்காக இருந்தால் போதாதா? குடி, ஊர்சோலிகள், பொறுப்பில்லாத வாழ்க்கை. கமலாவுக்கு பகல் முழுவதும் வங்கியில் தலைதெறிக்கும் வேலை. வீட்டுக்கு வந்தால் சமையல், வீட்டுவேலைகள், பிள்ளைகளின் பிரச்சனைகள். இயற்கையாக அவளுக்கு இருந்த கலகலப்பு எங்கோ பறந்துவிட்டது.

திருமணத்துக்குப் பின் அவள் பரதனுடன் கதைத்ததே கிடையாது. முதல் ஆறுமுறைகளும் அவன் பயணம் போனபோதும்கூட அவள் அவனை வழியனுப்பப் போகவில்லை. ஆனால் இம்முறை தன் பிடிவாதத்தை ஒருபுறம் தள்ளிவைத்துவிட்டு அவனிடம் வந்து அவனுக்கு ஆறுதலும், ஊக்கமும் கூறி வழியனுப்பி வைத்தாள்.

பயணிகளிடையே ஏற்பட்ட கலகலப்பு, பரதனை சுயநினைவுக்குக் கொண்டுவந்தது. நினைவுகளுடன் இருந்த அவன் தன்னையறியாமலே நீண்ட நேரம் தூங்கிவிட்டதையும் உணர்ந்தான்.

விமானம் மொஸ்கோ விமானநிலையத்தில் இறங்கப் போவதாக அறிவிக்கப்பட்டது. அங்கிருந்து இரண்டு மணிநேரம் கழித்து, அடுத்தவிமானம் அவர்களை ஏற்றிக் கொண்டு பரிஸ் கிளம்பும். மொஸ்கோ விமான நிலையத்தில் பலத்த சோதனை. ஏஜென்சிக்காரரையும், அவர் கூட்டிக் கொண்டு வந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அத்தனை பேரையும் தனியறைக்குக் கூட்டிச் சென்று நீண்டநேரம் விசாரித்தனர். அவர்கள் செல்லவிருந்த விமானம் மற்றப் பயணிகளை ஏற்றிக் கொண்டு புறப்பட்டது. விசாரணையின் பின் அவர்களி பாஸ்போட் எல்லாவற்றையும் வாங்கி, மீண்டும் இலங்கைக்கு அனுப்புவதாகக் கூறிவிட்டு அதிகாரிகள் சென்றனர்.

பேயறைந்ததுபோல் பரதன் உட்கார்ந்திருந்தான். உலகம் அவன்முன் ஒரு சூனியமாகக் காட்சியளித்தது. தனக்கு இன்னும் பைத்தியம் பிடிக்கவில்லையே என்பதையறிய அவனுக்கே வியப்பாக இருந்தது. அவன் உடம்பு அடித்துப்போட்டது போல ஆட்டம் அசைவின்றி சோர்ந்து கிடந்தது. வாழ்க்கை என்பதனை பூந்தோட்டமாக்க நினைத்த அவனுக்கு அது ஒரு பாலைவனமாக உணரமுடிந்தது. பிறக்கும் போதும் ஒன்றையும் கொண்டு வரவில்லை, சாகும்போதும் ஒன்றையும் கொண்டு போகப் போவதில்லை. கவலைகளும், சந்தோஷங்களும், வசதிகளும், உறவுகளும் பகைகளும், வெற்றிகளும் தோல்விகளும், இடையிடையே வந்து இடையிலே போய் விடுகின்றன.

விமானநிலையத்தில் தங்கும் விடுதியில், ஒருநாள் இருந்தனர். மறுநாள் மீண்டும் இலங்கைப் பயணம் என அறிவிக்கப்பட்டது. பொழுது விடிந்தது, அதிகாரிகள் வந்தார்கள். பரதனை மட்டும் அழைத்துக் கொண்டு போனார்கள். அப்போ அவனுடன் இருந்த மற்ற தமிழர்கள் கதைத்தது அவன் காதில் வீழ்ந்தது. "சனியன் பிடித்தபோல இவன் வந்ததால்தான் எங்களையும் மறித்து விட்டனர். ஆளைப் பார்த்தாலே விடியாத முகம். நான் நினைக்கிறேன், இவனை மட்டும் தான் இலங்கைக்கு அனுப்பப்போனுங்கள். எங்களை விட்டு விடுவார்கள்." இதைக் கேட்ட பரதனின் கண்கள் ததும்பின.

அதிகாரிகளுடன் பேசிக்கொண்ட ஒருவர் பரதனையும் அழைத்துக் கொண்டு விமானத்தில் ஏறினர். விமானம் புறப்பட்டது. பரதன் அழுதகண்களுடன் அவரைப் பார்த்தான். அவர் சிரித்தார், ஆங்கிலத்தில் ஏதோ சொன்னார் அவனுக்குப் புரியவில்லை.

"படிக்கிற வயதிலே எதையெதையோ செய்தேன். இந்த ஆங்கிலத்தை ஏனென்று மூலைக்குள் தள்ளிவிட்டேன். இப்போ இவரோடு கதைத்து இலங்கைக்குப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போகாமல் வெறெங்காவது ஒரு நாட்டில் இறங்கிவிடச் சொல்லலாமென்றால் எப்படிச் சொல்வது?" அவன் தனக்குள் நொந்து கொண்டே பெருமூச்சு விட்டான். அவரும் கண்ணயர்ந்து தூங்கிவிட்டார். விமானத்தில் அறிவிப்பு ஒலித்தது. 'பரீஸ்' என்ற சொல்லை மட்டும்தான் அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. அவனுக்கு ஒரு நப்பாசை எழுந்தது. 'பரீஸில் இறங்கி இலங்கைக்குச் செல்லும் அடுத்த விமானத்தில் ஏற்றுவதற்குத்தான் இவர் கூடவருகிறார். இவருக்குத் தண்ணி காட்டிவிட்டு, விமானநிலையத்தில் மாறி விடவேண்டும். பாதி, பாஸ்போட் ஒன்றும் வேண்டாம். பிச்சையெடுத்தாலும் பரவாயில்லை. இலங்கைக்குத் திரும்ப கூடாது'. என்று பரதன் முடிவு செய்திருந்தான்.

விமானம் இறங்கியது. அங்கு மீண்டும் சோதனைகள் ஆரம்பமாகியன. பரதனுடன் வந்தவர் அதிகாரிகளுக்கு ஏதோ சொல்லிவிட்டு பரதனைக் கூட்டிக் கொண்டு விமானநிலையத்துக்குள் சென்றார்.

"ஹலோ, பரதன்" என்ற ஒரு குரல் கேட்டு, பரதன்திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். அவன் வாயில், "ஹெலோ" மட்டும்தான் வந்தது. அவன் கண்களையே அவனால் நம்பமுடியவில்லை. சந்தோஷம் தலையில் தாவியேற எச்சிலை மிண்டி விழுங்கிக்கொண்டு,

"திலீபன் நீங்களா?" என்றான் பரதன்.

"ஆம்" என்று அர்த்தம்பட மலர்ந்த முகத்துடன் சிரித்துக் கொண்டே அவனை அணைத்தான் திலீபன்.

"இவர் நம் ஆள், எனது லோயர், நான்தான் உனக்கு உதவுவதற்கு அனுப்பியிருந்தேன். உனது அக்கா கமலா எல்லாவிபரங்களையும் எனக்கு அறிவித்திருந்தா. இனிப் பயப்படத் தேவையில்லை" என்று திலீபன் பரதனின் முதுகில் தடவிவிட்டான். பின் தன் லோயருக்குக் கை கொடுத்து, பிரான்ஸ் மொழியில் நன்றி கூறினான்.

"என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் திலீபன். நான் அறியாமல் உங்களுக்குத் தவறு செய்து விட்டேன். காலங்கடந்தபின்தான் எனக்கு நல்லது கெட்டது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தெரிகிறது." என்று அழுதான் பரதன்.

"உன் அக்காவைத்தான் நான் காதலித்தேன். இன்னும் அவள்தான் என் இதயத்தில் இருக்கிறாள். காதலில் தோல்வி என்று நான் தற்கொலை செய்திருந்தால், யாருக்கும் பயன்படாமல் மண்ணோடு மண்ணாகியிருப்பேன். உயிரோடு இருந்தேன், முயற்சி செய்தேன், முன்னுக்கு வந்தேன். இன்று தமிழ் மக்களுக்கு இயன்றளவு உதவி செய்யுமளவிற்கு கடவுள் என்னை உயர்த்தியிருக்கிறான்."

"நீங்கள் என்ன செய்தாலும், அக்காவின் பெயரிலே செய்வதிலிருந்தே உங்கள் உண்மைக் காதலை என்னால் அழிக்க முடியவில்லை என்பதை நான் உணர்ந்துகொண்டேன். நாட்டில் எங்கு பார்த்தாலும், 'கமலா' என்ற பெயரில் பக்ரறிகள், தொழிற்ஸ்தாபனங்கள், பாடசாலைகள், அநாதைவிடுதிகள் என்று உங்கள் சேவைகளைப் பார்க்கும் போது உங்கள் உண்மை உள்ளத்தை, தியாக உணர்வுகளை அறிய முடிந்தது. அக்காவை உங்களுக்குத் திருமணம் செய்து வைத்திருந்தால், அவள் இன்று எவ்வளவு சீரும், சிறப்புடனும் இருந்திருப்பாள். பாவி நான் கெடுத்துவிட்டேன்" என்று பரதன் தன் தலையில் அடித்தான்.

அவனைத் தடுத்து, தன் மார்புடன் அணைத்துக்கொண்டே, "இனி உங்கள் ஒருவருக்கும் ஒருகுறையும் வராது. அதற்குரிய ஏற்பாடுகளை நான் செய்திருக்கிறேன். நீயும் என்னுடன் இருக்கலாம். என் பக்ரறியில் வேலையும் தருகிறேன்". என்றான் திலீபன்.

தான் வணங்கிய கண்ணபிரான், தன்னைக் கைவிடாமல் திலீபன் வடிவில் வந்து காப்பாற்றியிருக்கிறான் என்றுஉள்ளம் பூரிக்க, கண்களில் ஆனந்தக்கண்ணீர் வடிய, திலீபனின் கரத்தைப் பற்றி தன் கண்களில் ஒற்றித் தன் அளவுகடந்த நன்றியுணர்வை வெளிப்படுத்தினான் பரதன்.

சாதி என்பதும், சீதனம் என்பதும் அனுமதிக்கக்கூடிய பழக்கங்களல்ல. அறவே ஒழிக்கப்பட வேண்டியவை.

www.tamilarangam.net

# வேண்டாம் சமாதானம்

– கௌதமன் –

நவீன யுகத்தில்
நலிந்த யந்திரங்கள்
"பாட்டாளி" தாங்கள் தாம்!...
வரியுமில்லை சேமிப்புமில்லை
வருங்கால நலனுமில்லை!

மணி நேரத்திற்கு – கணக்கு
மனதிலேதான்; கையிலில்லை.
ஏகப்பட்ட போட்டியில்
ஏங்கிவிரியும் – இதயங்கள்
ஏழாயிரம் மைல்களுக்கப்பால்
நீண்டும் வாழ வைக்கின்றன.

தானம் வார்க்கும் – போது
சமாதானம் என்றவுடன்
இன்னும் தொடராதா
இன்னலின் அர்த்தங்கள் – என்று
மனதிற்குள் புழுக்கம்!

அங்கே எடுபிடிகளுக்குள்
அகப்படும் "தாமி"களின் – ஓலங்கள்
கடல் கடந்தும்
கண்ணோட்டம் வைத்திருக்கும்
"குஞ்சு"களின் உள்ளங்களை
அஞ்சச் செய்கின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறுவர் களஞ்சியம்

## நன்றி மறவேல்

ஒரு காட்டிலே ஒரு வேடன் வசித்து வந்தான். அவன் நாள்தோறும் வேட்டைக்குச் செல்வதே வழக்கம். அவன் கையில் அம்பும் வில்லும் ஏந்தியே செல்வான். ஒரு நாள் அவன் கடற்கரைவழியே போய் கொண்டிருந்தான். அவன் நடந்து வந்த களைப்பில் அருகில் இருந்த ஒரு மரநிழலில் அமர்ந்து சிறிது நேரம் கண்ணயர்ந்தான்.

அப்போது அக்கடற்கரையின் அருகில் ஒரு சிறு குழி ஒன்று காணப்பட்டது. அதில் தண்ணீர் கிடந்தது. அந்த குழியின் அருகில் ஓர் எறும்பு ஒன்று ஊர்ந்து வந்தது. அது கால் வழுக்கி அந்த நீரில் விழுந்து தத்தளித்தது. இதனை மரத்தில் இருந்த புறு ஒன்று கண்டது. உடனே அது எறும்புக்கு உதவி செய்ய நினைத்தது. உடனே அது அதன் அருகில் சென்று ஓர் சுள்ளித்தடியொன்றை எடுத்து அந்த நீரில் போட்டது. அதில் ஏறி அந்த எறும்பு கரையை அடைந்தது.

எறும்பு அந்தப் புறுவுக்கு நன்றி கூறியது. பின்பு புறு பறந்து சென்று ஒரு மரத்தின் கிளையில் இருந்து இளைப்பாறியது. அப்போது வேடன் நித்திரை முடிந்து எழுந்தான். அவன் அந்த புறுவைக் கண்டான். உடனே அந்தப் புறுவை நோக்கி அம்பு எய்ய ஆயத்தம் ஆனான். இதனைக் கண்ட எறும்பு விரைவாக ஓடிச் சென்று அவன் காலில் கடித்தது. அவன் "ஆ... ஊ.." என்று கத்தினான். அவன் கத்திய சத்தம் புறுவின் காதில் விழுந்தது. புறு அந்த வேடனைக் கண்டுவிட்டது. உடனே தப்பிச் சென்றது. வேடன் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றான். பின்னர் புறு எறும்பிடம் வந்து நன்றி கூறிற்று.

அதுபோல் பிள்ளைகளே ஒருவர் எங்களுக்கு உதவி செய்தால் அந்த நன்றியை ஒருபோதும் மறக்கக் கூடாது.

— ஆக்கியவர் — தி. வாசுகி —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாழ் பாடி

அவனுடைய கண்கள் இருக்க வேண்டிய இடத்தில் இருபள்ளங்கள் இருந்தன. வாழ்வில் பெரும் பேறான கண்ணொளியை அவன் இழந்துவிட்டான். அவனுடைய முகத்தில் அழகு என்பது சிறிதும் இல்லை, அது சுடுகாடு போலப் பாழடைந் திருந்தது. முதல்முதலாக அந்த முகத்தைப் பார்ப்பவர்களுக்கு மனதில் அரு வருப்புத் தோன்றும்.

ஆனால், அவன் தன்னுடைய யாழைக் கையில் எடுத்துவிட்டால் இந்த உடற்குறைபாடெல்லாம் கேட்போர் கண்களுக்குத் தோன்றாமல் மறைந்துவிடும். அவர்களுடைய கண்கள் தம் வேலையைச் செய்ய மறுத்துவிடும். செவிகள் மெய் மறந்து கேட்டுக் கொண்டே இருக்கும். சங்கீதம் முடிந்ததும் அவன் மறுபடி பழைய குருடன்தான் கேட்டுக் கொண்டிருந்தவர்களும் பழையபடி அற்ப மனிதர் களாகிவிடுவார்கள்.

அவனுடைய ஊர் தென்னிந்தியாவில் ஒரு கிராமம். எல்லோரும் அவனை யாழ்பாடி என்றுதான் அழைத்தார்கள். ஆனால் அவனுடைய மனைவிமட்டும் அழைப் பது "குருட்டுப் பிணம்" என்று. அவள் அவனுடைய வாழ்வின் துர்தேவதை மாதிரி. யாழ்பாடியினுடைய மனைவி வழக்கம்போல அன்றும் தனது தூற்றல் திருப்பள்ளி யெழுச்சியைப் பாடினாள். கொஞ்சம் உரமாகவேதான் பாடினாள். ஒருநாளும் இல்லாதவாறு அது யாழ்பாடியினுடைய மனதிற் சுருக்கென்று விஷம் ஏற்றப் பட்ட ஊசி போலத் தைத்தது. அவனுக்கே அதன் காரணம் விளங்கவில்லை. அவனுக்கு கோபம் வரவில்லை, அது வெகுதூரம். இனிமேல் இவ்வீட்டில் இருக்கக் கூடாது என்ற எண்ணந்தான் அவனுக்கு உண்டாயிற்று. அழுக்கடைந்த சால்வையையும் யாழையும் எடுத்துக்கொண்டு கிளம்பினான் எங்கே என்று அவனுக்கே தெரியாது.

ஏதோ வைராக்கியத்திற் போகிறான் வயிற்றிற் பசி கடித்தவுடன் திரும்பி வருவான் என்று மனைவி நினைத்தாள். ஆனால்.... அவன் திரும்பி வரவேயில்லை. அக்காலத்தில் இலங்கையின் தலைநகராகிய அநுராதபுரத்தில் வாலகம்பா என்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


சிங்கள மன்னன் ஆட்சி செய்து வந்தான். அவன் ஓர் இசைப்பித்தன். அவனே பெரிய இசை வல்லுனன். அவனுக்கு இசையென்றால் போதும் வேறொன்றுமே வேண்டியதில்லை. இசைப்புலவர்கள் வேண்டினால் தன்னையே அர்ப்பணம் செய்துவிடக் கூடிய வள்ளல் அவன்..

அந்தக் குருட்டு யாழ்பாடியும் அவ்வரசனை நாடி வந்தான். சபையில் இருந்தவர்களுடைய மனத்தில் யாழ்பாடியைப்பற்றி ஓர் அலட்சியமான நினைவு எழுந்தது.. இந்த குருடனுக்கு என்ன இசை தெரியப்போகிறது, இவனைப் பார்த்தால் தெருவிற் பிச்சைக்கு யாழ் வாசிக்கும் நாடோடி போலல்லவா இருக்கின்றான். இவனுடைய பாமர சங்கீதத்தை, இசைக் கடலைக்கரைகண்ட எங்கள் அரசன் எங்கே இரசிக்கப்போகிறான், பொருளாசை பிடித்து வீணுக அலைகிறான் என்று தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். அரசனின் ஆணைப்படி யாழ்பாடிக்கு ஆசனம் கொடுக்கப்பட்டது.

யாழ்பாடி யாழ்நரம்புகளைத் தெறித்தான். அந்த ஸ்வரங்களில் ஓர் எழுச்சி, ஒரு மிதப்புக் காணப்பட்டது. கம்பீரமும் அகங்காரமும் அவற்றிலே தொனித்தன. நாதம் மேலே மேலே போகின்றது..... சுற்றும் படைத்திரளாய் நிறைந்திருந்த கூட்டம் நான் முந்தியோ நீ முந்தியோ என்று சண்டையிடுகின்றனர் அந்த இசைவிருந்தை உண்பதற்கு.

யாழொலி ஓய்ந்துவிட்டது. ஆனால் அவன் எல்லோர் மனத்திலும் எழுப்பிவிட்ட போர்க்களக்காட்சி மட்டும் இன்னும் மறையவில்லை. யாழ்பாடி யாழைக் கீழேவைக்கிறான் கரகோசம் செய்வதற்குக்கூட ஒருவரிடமும் சுயஅறிவில்லை. மது அருந்திய மந்திகள்போல எல்லோரும் மதி மயங்கிக் கிடக்கிறார்கள்.

அரசனுக்கு மனம் பூரித்துவிட்டது. மானிடஉருவில் வந்த கந்தர்வனு! என்று அதிசயிக்கிறான்இலங்கையின் ஒரு பகுதியான மணற்றிடல் என்ற தீவை யாழ்பாடிக்கு பரிசாக அளித்தான். யாழ்பாடி அதிலே தன் இனத்தவர்களைக் கொண்டுவந்து குடியேற்றி வளம் பெருக்கிறான் என்று இலங்கைச் சரித்திரம் கூறுகிறது.

அந்த மணற்றிடல்தான் இப்போது யாழ்ப்பாணம் என்று வழங்கப்படுகிறது.

— இரா. ஜெயதரன் —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிந்திப்போமா? -மத்து சொக்கன்-

சிந்தனை என்பது ஒரு மனிதனைத் தெளிவு படுத்துவதாகும். அதுமாத்திரமல்ல நல்ல செயல் வடிவையும் கொடுத்து ஒரு மனிதனை வெற்றிக்கு இழுத்துச் செல்வதுமாகும். அச் சிந்தனையை சரியான நேரத்தில் சரியான முறையாகச் சிந்திக்க வேண்டும். அப்படிசரியான முறையில் சரியாக சிந்திக்காவிடில் அவனின் சிந்தனை மூளைச் செலவையும் காலச் செலவையுமே வீணடிப்பதாக அமையும். அதாவது குறிப்பிட்ட காலத்தில் சிந்திக்க வேண்டியதை முன்கூட்டி சிந்திப்பதாகவோ அல்லது காலம் தாழ்த்திச் சிந்திப்பதாகவோ பயனற்றுப் போய்விடும் என்பதாகும்.

சிந்தனையாளர்கள் எல்லாம் மக்கள் சமுதாயத்துக்கு தமது சிந்தனையை தாம் மட்டும் தெளிவு கண்டதுமல்லாமல், சமுதாயமும் தெளிவடைய சரியான காலத்தில் சரியான முறையாகச் சிந்தித்து செயல்பட்டு வெற்றிகண்டது மட்டுமல்லாமல், இன்றும்கூட அவர்களின் சிந்தனை மக்கள் மத்தியில் செயல்பட்டுக் கொண்டே இருக்கின்றது. அவ்வாறு இவ்வளவு காலம் சென்றும் அதுவலுப் பெற்று இருப்பதற்கு அவர்கள் சிந்தனை சரியான காலத்தில் சரியான முறையாக சிந்திக்கப்பட்டதே வெற்றியின் இரகசியமாகும்.

கிரேக்கத்தில் சிந்தனையாளர் சோக்ரெட்டிஸின் சிந்தனை இன்று உலகின் புதிய ஜனநாயகத்துக்கு வழிவகுப்பதாக அமைந்தது; பெத்தலேமில் யேசு கிறிஸ்துவின் சிந்தனை இன்று ஒரு பெரிய சமயத்துக்கு வழிகாட்டியாக அமைந்தது; மக்காவில் முகமது நபிகளின் சிந்தனை இன்னுமொருமதத்தை ம்க்கள் மத்தியில் மலரச் செய்தது. தென்ஆபிரிக்காவில் காந்தியின் சிந்தனை அகிம்சை என்னும் அறிவுகோலுக்கு வழிகாட்டியது. இவ்வாறு இன்னும் எத்தனையோ சிந்தனையாளர்கள் தமது சிந்தனையை சரியான முறையில் சிந்தித்துச்செயல்பட்ட படியால் அவர்கள் வெற்றிகண்டுள்ளார்கள் என்பது சரித்திரம் பகருகின்ற சான்றுகளாகும்.

இன்று ஐரோப்ப நாடுகளில் வாழ்ந்து கொண்டு இருக்கும் தமிழர்களின் சிந்தனை எங்கோ பின் நோக்கிக் கொண்டு போவதுபோல் காணப்படுகின்றது.

www.tamilarangam.net


சிறப்பாக ஜேர்மனியில் வாழ்கின்ற ஈழத்தமிழர்களின் சிந்தனை எல்லாம் திசை மாற்றப்பட்டதாக பொய்யான வாழ்வுக்கு இப்போதே தம்மை கோட்டை கட்டி கொள்வதான சிந்தனையில் செல்கின்றது. வெள்ளையனிடம் இருந்து நாம் சுதந்திரம் பெற்றபோது அப்போது சமுதாயம் சரியான முறையில் தமது சிந்தனையை சிந்திக்கத் தவறியதால் அப்போது வெள்ளையர்கள் எம்மை நாடி வந்தார்கள். இப்போது மீண்டும் நாமே அவர்களை நாடிவந்துள்ளோம். அப்போது அடக்குமுறையான அடிமைகளாக வாழ்ந்தோம். இப்போது சொறி நாய்க்கு வெள்ளை பூசியதுபோல அகதி என்ற போர்வையிலே எம்மை நாம் அடிமையாக்கிக் கொண்டோம். இது தொடர்ந்து செல்லுமானால் எமது எதிர் கால சந்ததியையும் இப்போதே எழுதிக் கொடுத்த அடிமையாக்கிய திட்டத் துக்கு ஆளாக்கிவிடுவோம், என்பது சிந்திக்கத் தெரிந்த சிலருக்குத் தெரியாதது இல்லை.

வெள்ளையரின் ஆட்சிக் காலத்தில் அவர்களின் அடிவருடியாக இருந்த சில படித்த ஈழத்தமிழர்கள் இப்போது வெள்ளையர் ஆட்சி இருந்தால் எவ்வளவு நல்லது என்று தனது சுயநலத்தைக் கொள்வதைப் பார்க்கின்றோம். ஆனால் அவனால் நாடு சுரண்டப்பட்டது, அவனுக்கு நாம் அடிமையாக வாழ்ந் தோம் அங்கிருந்தவனே எம்மை ஆண்டு கொண்டு இருந்தான் என்பதையெல்லாம் ஒருபுறம் மூட்டைகட்டிவிட்டு அற்ப சுகத்தையே அலட்டிக் கொண்டிருந்த காலமும் உண்டு. அதுபோல்தான் இப்போதுள்ள அகதி என்ற போர்வையில் அடிமையாக உள்ள ஈழத் தமிழர், சொந்த நாட்டில்கூட கிடைக்காத சொர்க் வாழ்க்கை இதைப்போய் அடிமையான வாழ்வு என்று எண்ணமுடியுமா என்று போலிக் கனவு காண்கின்றார்கள். சில ஜேர்மனியில் வெளியாகும் சஞ்சிகைகள் கூட இந்தியாவில் ஒரு எம்.எல்.ஏ க்கு கிடைக்காத சலுகை ஒரு அகதிக்குக் கிடைத்துள்ளது என்று எழுதுகின்ற அளவுக்கு அடிமைவாழ்வின் மகத்துவம் மறைக்கப்பட்டுள்ளது. இங்கே போலியாகக் கிடைத்த சுகவாழ்க்கை புதைந்துபோய் உள்ள அடிமைத் தளத்தை மறைத்துவிட்டது. இப்போதுதான் ஈழத்தமிழனும், தமிழ் பெண்களும் தமது சிந்தனையை சரியான முறையில் சிந்திக்கத் தொடங்கவேண்டும். இந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இடத்தில் போலிச் சுகத்துக்காக அல்லது அற்ப வாழ்வுக்காக உங்கள் சிந்தனையை சரியான முறையில் செயல்படத் தவறிவிட்டால் இதன் பாதிப்பு இப்போது அல்ல இன்னும் சிறிது காலமோ அல்லது பல காலத்தில் எங்களி இனம் பரதேசியாக பாலஸ்தீன மக்கள் பரந்துபட்டுப் போனதைப் போல் நாடோடி வாழ்க்கை வாழவேண்டிய அவல நிலைக்குஆளாக வேண்டிவரும்.

மேற்கு ஜேர்மனியின் அடிமை வாழ்வு அடிமட்ட சிந்தனையாளனால்தான் விளங்கிக் கொள்ளமுடியும். மற்றும்படி இந்நாட்டின் நாகரீக வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம், இயந்திரத்தாக்கம், நவீன பொருட்களின் அளவுக்கு மிஞ்சிய உற்பத்தி என்பன மூன்றும் உலக நாடுகளில் இருந்துவந்தவர்களுக்கு இமயத்தின் உச்சியை கண்டு ஆச்சரியப்படுவதுபோல அவர்களை மெய்மறக்கச் செய்துள்ளது. ஐரோப்பியனிடம் நாம்போல் வேலை கேட்டால் எமக்கு அவன் அளிப்பது அரைக்கூலியுமல்ல அதைவிட குறைந்த கூலியே. இதை எம்மின மக்கள் உணராமல் எம்நாட்டு நாணயத்தோடு ஒப்பிட்டு ஆ! எவ்வளவு பெரிய தொகை இதுபோதும் இதுபோதும் என்று கூப்பாடு போடும் ஒருகூட்டம். இப்படித்தான் இந்தியாவில் இருந்து 150 ஆண்டுகளுக்கு முன்னம் இலங்கை கொண்டுவந்த தமிழனும் உணவு கிடைத்தால் போதும் என்று வந்தான். இப்போது எமக்கு ஜேர்மனி எப்படியோ அப்போது இலங்கை இந்திய தமிழனுக்கு வாய்ப்பாக இருந்தது அவன் அன்று உணரவில்லை, அந்த அடிமைவாழ்வை. ஆனால் அவன் சந்ததி இன்று உணர்கின்றது அதன் தாக்கத்தை அதைத்தான் இப்போதுள்ள நம் இனத்தவர் இக்கூலிகிடைத்தால் போதும் இதுவே இனிக்கின்றது என்கிறார்கள். ஆனால் அதன் உண்மையான தாக்கம் காலம் செல்லப்புரியும்.

இதைவிட ஒரு நகரத்தைவிட்டு இன்னொரு நகரத்துக்குப் போகக்கூடாது என்ற சட்டம், பல ஆண்டுகள் சென்றாலும் தொழில் செய்யமுடியாது என்ற தடுப்பு, அப்படித் தடையைத் தாண்டிச்சென்றாலும் அன்டை நாட்டு வெள்ளைத் தோலுக்கு முன்னுரிமை கொடுத்து, அதுமிதமாக இருந்தால் கறுப்புத்தோலுக்கு என்ற இனவாதம். ஆதாரம் ஆயிரம் காட்டினாலும் அகதி அந்தஸ்து பறிக்கப்பட்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவல வாழ்க்கை. இதுபோல் இன்னும் எத்தனையோ கட்டுப்பாடுகள் எங்களைச் சூழ்ந்து மறைந்துள்ளது; அவை எல்லாம் எங்களை அடிமை என்ற கயிற்றால் பின்னியுள்ளது.

இந்த வேளையில் தான் நாம் சிந்திக்க வேண்டும். இப்போது எமது சிந்தனையானது சரியானவழியில் செயற்படவில்லையானால் எம்மை போலி வாழ்க்கையிலும் அடிமைப்புதைகுழியிலும் ஆழ்த்தியது மட்டுமல்லாமல் அடுத்து வரும் சந்ததியையும் அவதியுற வைக்க வேண்டுமா?

எனவே தனித்துவத்துடனும்இறைமையுடனும் சுய கௌரவத்துடனும் நாம் வாழ்வதற்கு தாயகம் வேண்டும். சமுதாயத்தின் விடிவுக்காக எமது சிந்தனை திருப்பப் பட்டால் அதுவே சிறந்த நாடு ஒன்றை உருவாக்கிவிடும்.

---

மேற்கு ஜெர்மனியில் 1,03,076 பேர் அகதிகளாக பதிந்துள்ளார்கள். 88,530 விண்ணப்பங்கள் விசாரிக்கப்பட்டுள்ளன. 8.6 % அகதி அந்தஸ்து பெற்றுள்ளார்கள். 91.4% விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்பட்டுள்ளார்கள். 34% அகதிகள் இந்நாட்டைவிட்டு வெளியேறி விட்டார்கள். இந்நாட்டில் அவுஸ்சிட்லர் எண்ணிக்கை 2,02,280 ஆகும். ஒப்பிடும்போது அகதிகள் எண்ணிக்கை அரை மடங்கு குறைவு. அகதிகளில் 80% மானவர் பணத்திற்காக வருகிறார்கள். இவ்வாறு ஏ.ஆர்.டீ இன் 'ரிப்போர்ட்' நிகழ்ச்சியில் 14.3.89 அன்று இடம்பெற்றது.

---



" இவ்வளவு வயதாகியும் முடி நரைக்கல்லியே "

" தலைக்கு வேலை குறைவு தம்பி! "

" எப்படி?... "

" எதையும் சிந்திக்காம செய்து போட்டுர்றன்! "

- [illegible] -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சித்திரா=பெண்

பார்த்திபன்

ஓ
அந்தக்
கொன்றைப்பூ
பூத்ததிலிருந்து
உணர்வுகளால் காயப்பட்டும்
வடுகளால் ஈரப்பட்டும்
ஒரு விதையை வளர்த்துவிட்டே
விழுகிறது புழுதியில்.
நான் மட்டுமேன்
அழுதுகொண்டு?
கருவறையில்
ஒரு அதிர்வு.
நான்
உன்னைப்போல்
அழமாட்டேனென்று.

\- சிவம்

## 2.

இரவு தங்கலுக்கு மாமியாரை அனுப்புவதற்காக சிவலிங்கம் சீக்கிரமாக மனைவியிடம் விடைபெற்றார். வீட்டுக்குக் கொண்டுபோக வேண்டிய பொருட்களைப் பையில் போட்டுக்கொண்டே "நானைக்கென்ன கொண்டுவர?" என்று கேட்டார்.

"எனக்கொண்டும் கொண்டுவர வேண்டாம். பிள்ளையளை வடிவாய்ப் பாருங்கோ. மருந்துகளைக் குடுத்து, குளிக்க வாருங்கோ. அம்மாவை ஆக்கினைப்படுத்த விடாங்கோ" என்று தவமணி பழையபடி கட்டிலில் படுத்துக் கொண்டாள்.

"சரி நான் போய் அம்மாவை அனுப்பிவிடுறன்" என்று சிவலிங்கம் வெளியேறினார். அவர் போவதையே தவமணி பார்த்துக் கொண்டிருந்தாள்.

www.tamilarangam.net


'அங்கயும் இஞ்சயும் ஓடித் திரிஞ்சதில கொஞ்சம் இளேச்சுத் தான் போனுர்'

தவமணி கண்களை மூடிக்கொண்டாள். சோர்வாக இருந்தது. எழுந்து நடக்க வேண்டும் போலிருந்தாலும் செய்யவில்லை. ஏதோ ஒருஇயலாமை மனதைப் பிசைந்து கொண்டிருந்தது.

'இப்பவரைக்கும் நான் என்னத்தைக் கண்டிருக்கிறன்? கலியாணம் கட்டுமட்டும் ஐயா, அம்மாவுக்காண்டி. கலியாணம் கட்டிஅப் பிறகு புருசனுக்கும், பிள்ளையளுக்குமாய்.....

பிறந்ததில இருந்து மற்றவைக்காண்டியே வாழ்ந்தாச்சு. இப்பகூட வயித்துக்க இருக்கிற முகந் தெரியாத சீவனுக்காய் நல்ல சாப்பாடாய் சாப்பிட்டு, மருந்துகள் குடிச்சு, அப்பப்ப உடம்பைச் சோதிச்சு, நாலுக்கு ஆஸ்பத்திரிக்கு வந்து, பிறப்புக்காய் காத்திருந்து .....

அடுத்தவையின்ரை தேவைக்கு என்ரை பங்களிப்புத் தேவைப்படுகுதே தவிர என்ரை தேவையை, என்ரை நலனை, என்னைக் கவனிக்க ஏன் ஒருதரும் இல்லை? நான் பொதுநலவாதியா இருக்கிறதாலதான் மற்றவை சுயநலமா இருக்கினமா? அல்லாட்டி அவையின்ரை சுயநலத்தாலதான் நான் பொதுநலமா ஆயிட்டேனே?'

தவமணி திறந்திருந்த யன்னலினூடாக வெளியே பார்த்தாள். பூத்திருந்த கொன்றை மரம்தான் தெரிந்தது. பச்சை இலைகளும், மஞ்சள் பூக்களும் இணைந்து அழகைப் பிறப்பித்திருந்தன. பூக்கள் இடையிடையே சொரிந்துகொண்டன. காற்று விளையாட்டாக அவ்வப்போது அசைத்துப்பார்த்தது.

'ஏன் நான் தனிமைப்பட்டிருக்கிறதா யோசிப்பான்? எனக்குத்தான் புருசன், பிள்ளை, குட்டி எல்லாம் இருக்குதே? இங்கதானே குழப்பமாயிருக்கு. எனக்காண்டி அவையளோ? அவையளுக்காண்டித்தான் நான் இருக்கிறனே?

பாசம், பந்தமெண்டிருந்தா நான் இப்பிடியெல்லாம் யோசிக்கலாமே? சாதாரண மனுசியா, அம்மாவா இல்லாம ஏன் இப்பிடி அரக்கத்தனமான யோசினையளா வருகுது?

இல்லை. இது இப்ப மட்டுமில்லை. அப்பப்ப வந்துகொண்டுதானிருக்குது. நான்தான் கேள்வியளை ஒதுக்கிக் கொண்டிருக்கிறன். என்னை மற்றவையள் பாவிக்கிறபடியால்தான் எனக்கு யோசிக்க நேரமில்லாம, முடியாமலிருக்கு'

தவமணி கண்ணீர் வந்துவிட்டதோ என்ற ஐயத்தில் கண்களைவிர

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ல்களால் தழுவிப் பார்த்தாள். அங்கே ஈரம் இல்லாமல் உலர்ந்து போயிருந்தது. தன்னையும், தனக்கு இப்போது வரும் எண்ணங்களையும் நினைக்கத் தவமணிக்கு ஆச்சரியமாக இருந்தது.

தனிமை.

'தனிமைதான் இப்பிடியான சிந்தனையைத் தூண்டுது. அப்பிடியெண்டா இவ்வளவு நாளும் தனிய இருந்து சுயமாச் சிந்திக்கேலயெண்டு தானே கருத்து? எப்பிடிச் சுயமாச் சிந்திக்க சந்தர்ப்பம் கிடைக்கும்?

விடிய எழும்பி அடுப்பு மூட்டத் தொடங்கிறது தொடங்கினதுதானே. பள்ளிக்கூடம் போற பிள்ளையளுக்கு உடுப்புப் போட்டு, காலமைச்சாப்பாட்டைக் குடுத்து, மத்தியானச் சாப்பாட்டைக் கட்டிக் குடுத்து, வேலைக்கு போற அவருக்கும் சாப்பாட்டைக் குடுத்து, கட்டிக் குடுத்து, இரவுச் சமையலுக்கும், அடுத்தநாள் சமையலுக்குமாய் சாமான் வேண்டப் போய் எல்லாற்றை உடுப்புகளையும் தோய்ச்சு, காய்ஞ்சதை அயன் பண்ணி, வீட்டைத்துப்பரவாக்கி, வளவைத் துப்பரவாக்கி....

பின்னேரம் பள்ளிக்கூடத்தால வாற பிள்ளையளுக்கு குளிக்க வாத்து, ரீ போட்டுக் குடுத்து, தலையில பேன் எடுத்து, அவர் வர அவருக்கும் ரீ போட்டு, இரவுச் சமையலைத் தொடங்கி .....

எல்லாருக்கும் சாப்பாட்டைப் போட்டுக் குடுத்து, கடைசியாய்ச் சாப்பிட்டு, பாத்திரங்களை கழுவி . . .

நடுச்சாமத்துக்கும் எப்பன் முன்னதாய் படுக்கப் போகேக்கதான் நிம்மதி, கொஞ்சம் ஓய்வு. இல்லை. அப்ப கூட ஓய்வில்லை. பிறகும் வேலையிருக்கு.'

தவமணிக்கு நினைக்கும்போதே களைப்பு வந்தது. இவ்வளவும் செய்வது தான்தானா? எப்படி? என்று நினைக்கையில் இப்போது வியப்பாக இருந்தது. இந்த வியப்பு ஏன் மற்றவர்களுக்கு வருவதில்லை என்பதும் அவளுக்கு வியப்பாக இருந்தது. தான் பொருட்படுத்தப்படாமல் வேலை வாங்கப்பட்ட சம்பவம் அவளுக்கு நினைவுக்கு வந்தது.

அன்று அதிகாலையில் எழும்போதே தவமணிக்குத் தலையிடித்துக்கொண்டிருந்தது. தலைக்கு தோய்ந்துவிட்டு கடைக்குப் போனபோது தூறலில் நனைந்ததால்தான் இது என அவள் தெரிந்து கொண்டாள். சுகவீன லீவு எடுக்க அவள் என்ன அலுவலகத்திலா வேலை செய்கிறாள்? யாரிடம் அவள் விடுப்புக் கேட்பது? யார் கொடுக்கப் போகிறார்கள்?

அதனால் அவள் தனது வழமையான வேலைகளை ஒத்தி வைக்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


வில்லை.காலையில் அடுப்பு மூட்டத் தொடங்கியதிலிருந்து இரவுச் சாப்பாட்டை எல்லோருக்கும் பரிமாறும்வரை ஓய்வு கிடைக்கவில்லை. எனவே தலையிடியும் கனமாகியிருந்தது.எரிச்சல் வந்தாலும் 'தனது வேலைகள்' என்பதால் செய்து முடித்தாள்.

பாத்திரங்களைக் கழுவி, கவிழ்த்து வைத்து, வீடு முழுவதையும் ஒருமுறை சுற்றிப்பார்த்து, மின்சார விளக்குகளை அணைத்து, கட்டிலில் வந்து படுத்தபோதுதான் அவளுக்கு அப்பாடா என்றிருந்தது.ஆனால் அந்த அப் பாடா கூட சில விநாடிகளில் விழுங்கிவிட்டது.

அருகில் படுத்திருந்த சிவலிங்கம் அவள் பக்கமாக நெருங்கிக் கொஞ்சம் தாமதித்து, பின் அணைத்தார்.தவமணிக்கு எரிச்சலாக இருந் தது.தலையிடியும், உடல்நோவும் உபத்திரவப்படுத்திக் கொண்டிருந்தன.

"தலையிடிக்குதப்பா" என்று சொல்லி மறுபக்கம் திரும்பிப் படுத்தாள்.சிவலிங்கம் அவள் சொன்னதில் அக்கறை கொள்ளாமல் வேறில் அக்கறையாயிருந்தார்.அன்று அவருக்கு 'மூட்' இருந்தது.அதனால் தவமணி யை மறுபடி அணைத்து, உடைகளைக் களைந்து, படர்ந்து .... அவளைப் பாவித்துக்கொண்டார்.

அன்று நடந்தது அப்பட்டமான பாலியல் பலாத்காரம் என் பது இப்போதுதான் தவமணிக்குப் புரிந்தது.அன்று தனக்குள் அழுததையும் நினைத்துப்பார்த்தாள்.அன்றைய சம்பவத்தின் விளைவாய் இப்போது முழு சாகியிருக்கும் புது உயிரையும் நினைத்துப் பார்த்தாள்.

'ஆருக்குமே என்னில அக்கறை இல்லை.எல்லாருக்கும் தங்கட விருப்பந்தான், தங்கட தேவைதான் முக்கியமா இருக்கு.பிள்ளையளில இரு ந்து புருசன் வரைக்கும் என்னைப் பாவிக்கினம்.ஒவ்வொரு விதமாய்.'

தவமணியின் விரல்கள் இப்போது கண்கள் கசிந்திருப்பதை உண ர்ந்து, அவற்றைச் சுத்தம் செய்வதில் ஈடுபட்டன.'வேண்டாம். இப்பிடியா னயோசினையளே வேண்டாம்.இப்பிடியே யோசிச்சா என்ரை மண்டைதான் வெடிக்கும்'

தவமணி யன்னலூடாகக் கொன்றை மரத்தைப் பார்த்தாள். வலுக்கட்டாயமாக ரசிக்க முயன்றாள்.இரண்டு பறவைகள் தங்களுக்குள் ஏதோ ரகசியத் திட்டம் தீட்டுவதைப் பார்த்து அதில் லயிக்க முயன்றாள். முடியவில்லை.

அம்மா வரும்வரைக்குந்தான் தவமணியால் ஏராளமாகச் சிந் திக்க முடிந்தது.இரவுச் சாப்பாட்டைக் கட்டிக்கொண்டு அம்மா வந்ததும் அவளுடைய சிந்தனைகள் தலைகீழாக மாறிவிட்டன.

(தொடரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# களம்... ஆணாதிக்க சமுதாயத்தின் கட்டமைப்பினை உடைக்கும் கரங்களுடன் இணைவோம்

" பெண்களிடம் வம்பு செய்யும் ஆண்கள் கோழைகள் "

" அவர்களை துணிச்சலுடன் எதிர்த்து நின்று போரிடவேண்டும் "

" தாழ்வு மனப்பான்மையை விட்டொழித்து எதிர்த்து நின்று செயல்பட - வேண்டும். "

ஆண்கள் செய்யும் கொடுமைகளை எதிர்த்து வாழவோ, தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவோ எந்த விதமான பயிற்சியும் பெண்களுக்கு அளிக்க நமது சமுதாயம் தானாக முன் வந்ததில்லை. வீட்டிலோ அல்லது வெளியிலோ ஆண்களால் ஏற்படும் விளைவுகளால் உயிரிழக்க வேண்டும், அல்லது தற்கொலை செய்து கொள்ள வேண்டும். இதுதான் காலம்காலமாக பெண்களுக்கு ஆணாதிக்க சமுதாயம் ஏற்படுத்திய மகாபாவம். " கல் என்றாலும் கணவன், புல் என்றாலும் புருஷன் என்ற தாரக மந்திரங்களையும், பிற்போக்கான புராணங்களையும், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் அணிகலன்களையும் அணிவித்து அடக்கி வருகிறது.

பெண்களின் உழைப்பை மட்டுமல்ல, உடலையும் சுரண்டி வருகிறது. பெண்கள் என்பவர்கள் ஆண்களின் தேவைக்காக வாழ்பவர்கள் என்றும், வெறும் பிள்ளைபெறும் இயந்திரங்கள் என்றும், ஆண்களின் சொத்துக்களாகவும் எந்நேரமும் சுற்றிவிட்ட பம்பரம் போல மூளையைக் கசக்கிக் கொள்ளாமல் அலுப்பும் பஞ்சியைப் பாராமல் இயங்குவதற்கென கற்பிக்கப்படுகிறார்கள், அப்படியே வளர்க்கப் பெற்றில் ஆணாதிக்கப்பசிக்கு இரையாகிவிடுகிறார்கள்.

பெண்கள் கண்ணகிகள், அஷ்ட லக்சுமிகள், என்ற அடைமொழியின் உதவியின்றி நடக்கமுடியாதவாறு ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சொந்த விருப்பு, வெறுப்பு, உணர்வுகள் இல்லையென்றும், தங்கள் கைப்பொம்மைகளாக்கி மூடமாக வைத்திருக்கிறது.

பெண்கள் வீரம், விவேகம், தனித்து நின்று எதையும் செய்யும் திறனற்றவர்கள் என்று இதுவரை முகவுரையும் இறுதியுரையும் எழுதிக்கொண்டிருக்கும் ஆணாதிக்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமுதாயம் தங்களின் தேவைகளை எளிதாகவும், இயல்பாகவும் செலுத்தி ஆண்டாண்டுகாலமாக அநுபவித்து வந்த அத்தியாயம் முடிவுற்று பெண்கள் ஆண்களுக்கு எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல என்று முகவுரை எழுத ஆரம்பித்திருக்கிறார்கள். அந்த அத்தியாயத்தைத் தொடருவதற்கு நாங்களும் எங்கள் கரங்களை அவர்களுடன் இணைப்போம்.

— சண். ஜே. சிங்கம் —

---

## அடிமை வாழ்வைத்தகர்த்தெறிவோம்.

எமது வாழ்க்கை சமூகம், குடும்பம், உறவுகள் பாசம் என்ற ஓர் குறுகிய வட்டத்திற்குள் உருவாகி அதற்குள்ளேயே முடிந்து விடுகிறது. நாம் எப்படி அடக்கப்படுகிறோம், உலகில் எந்த விதமான பிரச்சனைகளையும் எம்மால் எதிர்கொள்ளமுடியும் என்று சிந்திக்கும் பெண்களை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

பல பெண்விடுதலை பேசுபவர்களும், சோசலிசம் வந்தால் பெண் அடிமை தீர்ந்துவிடும் என்பவர்களும் தமது பெண்கள் துணிந்து ஒரு முடிவு எடுக்கிறார்கள் அதை ஏற்க அவர்களால் முடிவதில்லை.

எந்த ஒரு நாட்டிலும் போராட்டங்களில் பெண்களின் பங்கு மிகவும் அவசியம் என்பதை பல போராட்டங்கள் நடந்தேறிய நாடுகள் நிரூபித்துள்ளன. ஈழப்போராட்டத்தில் எமது பெண்கள்பங்கை 'பார்வையாளர்' ஆக்கிடல் செய்கிறார்கள். அவர்கள் கூறும் சாட்டுக்கள் கோமாளித்தனமானவை. அதுமட்டுமல்ல எமது நாட்டில் பலாத்காரத்திற்குள்ளான பெண்களை தகுதியற்றவர்கள் என்று கூறி அவளை சுடுகாட்டிற்கு அனுப்புகிறது எமது சமூகம். அதுமட்டுமல்ல சீதனம் என்னும் சங்கிலி அமைப்பை கட்டுக் குலையாமல் பாதுகாத்து, அந்தஸ்து வழங்குகிறது. இது அடிமைத் தனம், கட்டுப்பெட்டித்தனமான மாப்பிள்ளைமார் இந் நிகழ்ச்சியில் முக்கிய பங்கேற்கிறார்கள் என்பது சிந்திப்பதற்கு கூச்சமாக இருக்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பல வட்சம் கொடுத்து முன்பின் தெரியாத ஒருவனை கணவனாக்கி தனது மகளையே பாழ்கிணற்றில் தள்ளும் பெற்றோர்கள் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பது வேதனைக்குரியது. திருமணத்தின் பின் அவன் கொலைகாரனோ, குடிகாரனோ அவன் செய்யும் கொடுமைகளை எதிர்க்க முடியாமல் கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்று வாழச்செய்து கொண்டிருக்கிறது. இப் பாழாய்ப் போன சமூகம். ஆனாலும் தம்மால் தனித்து வாழக்கூடிய நிலையில் உள்ள பெண்கள்கூட எந்தவித முடிவும் எடுக்க பயந்து கொண்டிருப்பது வேதனையையும் வியப்பையும் தருகிறது.

இச்சமூகத்தை உடைத்துவிட்டு வெளியில் வருவது கஷ்டமானாலும் இப்படியே இருந்தால் எப்போதுமே எம்மால் வெளியில் வரமுடியாது "நோய் எதிர்ப்புச் சக்தி எம்மில் இல்லாவிட்டால் பல பயங்கரமான நோய்கள் எவ்வளவு இலகுவில் எம்மைப் பற்றிக் கொள்வது போல" எமது எதிர்ப்பை காட்டாமல் இருப்போமேயானால் எம் எதிரிக்கு நாம் மேலும் இடமளிப்பதாக ஆகிவிடும். எம்மை விடுவிக்க நாம்தான் போராட வேண்டும்.

அதுமட்டுமல்ல சமயத்திலும் பலர் வெளியில் வர பயப்படுகிறார்கள் எமது சமயக் கடவுள்களை எடுத்துக் கொண்டால் முக்காவாசி ஆண்கடவுள்களே. இவர்கள் பல மனைவிமார்களை கொண்டவர்களாயும் பெண்கடவுள்கள் தன் கணவனை தெய்வமாய் பூசிப்பவர்களாயும் பெண்கடவுள் தனித்து தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்று பிரிந்து போய்பின் ஒன்றும் முடியாமல் கணவனிடம் மீண்டும் தஞ்சமடைவதாகவுமே கதைகள் உள்ளன.

எம்மைச் சுற்றியுள்ள சகலவிதமான ஏமாற்று சக்திகளையும் இனங்காண வேண்டும். பயம், சமூகம் இப்படியே இருந்தால் நாம் வெளியில் வரவே முடியாது. எம்மை நாமே எம்விடுதலைக்காக தயார் படுத்த வேண்டும். அப்போதான் நாம் எமது அடிமை வாழ்வை தகர்க்கலாம்.

— ரஞ்சனி —

பிராங்பேர்ட்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆசியப் பெண்கள் ஜப்பானில் விற்பனை!

ஜப்பானின் கிராமப் பகுதி
பெண்கள் ஜனத் தொகை
றைந்துபோய் விட்டது. அங்கே
போதெல்லாம் அரசாங்கத்
அனுசரணையுடன் ஆசிய
டுகளில் இருந்து (பிலிப்
ன்ஸ், கொரியா, மலேசியா,
ங்கை, தாய்லாந்து) பெண்
இறக்குமதி செய்து அவர்
ஜப்பானிய கிராமப்புற
ளைஞர்களுக்கு திருமணம்
ய்து வைக்கிறார்கள். இந்த
ாபகரமான வியாபாரத்தில்

களை மணந்துகொண்டு பல கொடுமைகளை அனுபவிக்கின்றார்கள்.

இவர்கள் தமது சமூகத்தில் இருந்து தனிமைப் படுவது, சொந்தக் கலாசாரத்துக்கு எந்தவித மதிப்பும் கொடுக்கப் படாதது, அவர்களது இயலாமையைப் பயன்படுத்திக் கொள்வது என்பன புதுவகை "பெண் அடிமைத்துவத்தினை" தோற்றுவித்துள்ளது. பாலுணர்ச்சி கொடு

பைன்ஸ் பெண்களை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்துள்ளார். இவர் தனது நிறுவனத்தின் நடன அழகிகளிடம் ஒரு துண்டுப் பிரசுரம் விநியோகித்தார். அதில்... "நீங்கள் ஒரு ஜப்பானியனை மணந்தால் உங்களுக்கு ஒரு காரும், கலர் டெலிவிஷனும் கிடைக்கும்..." என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தத் திருமணங்களை நியாயப்படுத்தும் ஜப்பானிய நகர மேயர்களின் அறிக்கைகள் சில பெரும் கண்டனங்களுக்குள்ளாகி இருக்கின்றன.

அகிதா ஆளுனர் சபையின் உதவி ஆளுனர் மருயூமா கான், திருமணம் தொடர்பான சொந்த விடயங்களில் அரசாங்கம் தலையிடக் கூடாதென்றும்,

## 1987 இல் அதிகளவு இலங்கைப் பெண்கள் இறக்குமதி

முகவர் நிலையங்கள் (ஏஜென்
கள்) ஈடுபடத் தொடங்கி
ளன.

ின்வரும் விளம்பரங்களை
போதெல்லாம் ஜப்பானிய
சிய நாளிதழ்களிலும், சஞ்
ககளிலும் அடிக்கடி காணக்
யதாக இருக்கின்றது.

ந்தத் திருமண முகவர் நிலை
களுக்கு ஜப்பானிய நகரத்
வர்கள் சிலரும் தலைவர்
ாக இருப்பது தான் ஆச்சரிய
செய்தி. கிழக்காசிய நாடு
ல் இருந்து இறக்குமதி செய்
டும் இந்தப் பெண்கள் ஜப்
ிய கிராமப்புற விவசாயி

மைகள் இங்கே உற்சாகப் படுத்தப்படுகின்றன.

இதற்கெதிராக பல சமூக உரிமை இயக்கங்கள் குரல் கொடுக்க வாரம்பித்துள்ளன. இவ்விதம் திருமணம் முடித்த பெண்கள் சிலர் கொடுமைகளில் இருந்து தப்பிவந்து தத்தமது நாடுகளின் உயர் ஸ்தானிகராலயத்தில், அல்லது சில சமூக உரிமை இயக்கங்களிடம் சரணடைந்ததைத் தொடர்ந்து பிரச்சினை தீவிரமடைந்துள்ளது.

பிலிப்பைன்சில் நாட்டிய கலா நிலையம் வைத்திருக்கும் ஜப்பானியர் ஒருவர் சுமார் 300 பிலிப்

**இரா.சடகோபன்**

தன்னைப் பொறுத்தவரை இத்தகைய திருமணங்கள் சிறந்தது என்றும், தான் பிலிப்பைன்ஸுக்குச் சென்று அங்கே மக்கள் வறுமையில் வாடுவதைப் பார்த்ததாகவும், அவர்கள் அந்த வறுமை நிலைக்குப் பழக்கப்பட்டுள்ளதால் ஜப்பானின் கிராமிய வாழ்க்கையை சகித்துக் கொள்வார்கள் என்றும், ஜப்பான் புதிய வகை இன உற்பத்திக்கு இது உதவும் என்றும் குறிப்பிட்டார். இந்த அறிக்கை மனித உரிமைக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜப்பானின் யமகாசி – இயா யாமா பிரதேசத்தின் நகரத் தலைவரை தலைவராகக்கொண்ட சர்வதேச நட்புரிமைக் கழகம் என்ற பெயர் கொண்ட திரு மண தரகர் நிலையம் ஒன்ற பிலிப்பைன்ஸ் மணமகளுக்கான தகுதி என்ற விளம்பரத்தில் பின் வரும் நிபந்தனைகளைக் குறிப் பிட்டுள்ளது...

• உயர்கல்வி – மத்திய தர வர்க்க குடும்பநிலை ஆங்கிலம் பேசத் தெரிந்திருத்தல்.

## கலாசார ஆக்கிரமிப்பென விமர்சகர்கள் சாடல்!

• வெளிநாட்டில் வேலை செய்த அனுபவம் இருக்கக் கூடாது. ஜப்பான் பாஷை தெரிந்திருக்கத் தேவையில்லை. (விபசாரியாக இருக்கக் கூடாது).

• வயது 18—25 வரை. ஜப் பான் சமூகத்துடன் கலந்துவிட் விருப்பம் இருக்க வேண்டும்.

• பாலியல் நோய்கள் எதுவு மற்றிருக்க வேண்டும்.

• பிலிப்பைன்சில் இருக்கும் குடும்பத்தினருக்கு எதுவித பண மும் அனுப்பக் கூடாது. (பின் னர் தனது குடும்பச் செலவுக் கென பெருந் தொகைப் பண த்தை கேட்பதை தடுப்பதற் காக)

மொத்தத்தில் இவ்வித பெண் கள் தமது சமூகத்தில் இருந்து பிரிக்கப்பட்டு முடமாக்கப்படு கின்றனர். இவர்களுக்கு கார் ஒன்று கொடுக்கப்பட்டாலும் தேவாலயங்களுக்குப் போக வா அல்லது வேறு இடங்களு க்குப் போகவோ சுதந்திரம் கிடையாது. ஜப்பான் பாஷை தெரிந்திருந்தாலும் தன் கணவ னுடன் சொந்த அபிப்பிராயங் கள் பற்றி பேச அனுமதி கிடை யாது. இவர்கள் சில நகரங்க ளில் காணப்படுகின்ற "சிவப்பு விளக்கு" பெண்களிலும் பார்க்க சுதந்திரமற்ற பாலியல் அடிமை களாக மட்டும் கருதப்படுகின்ற னர்.

1985 இல் இருந்த ஆண்டு தோறும் இவ்விதம் 1500 திரு மணங்கள் ஜப்பான் – பிலிப் பைன்ஸ் நாடுகளிடையே நடை பெறுகின்றன.

ஜப்பானியர்களை திருமணம் செய்யும் பெண்கள் ஒரு ஜப் பானியராக மாற வேண்டு மெனக் கட்டாயப்படுத்தப்படு கிறார்கள். அவர்கள் குழந்தை களும் ஜப்பானியராகவே வளர வேண்டும். அவர்களின் சொந்த "நாமம்" இதன் பின்னர் மறை ந்துவிட வேண்டும்.

1987 ஆம் ஆண்டுகளிலேயே இலங்கைப் பெண்கள் அதிகம் இறக்குமதி செய்யப்பட்டனர். அதிகமான இலங்கைப் பெண் கள் சமூக நல உரிமைக் குழுக் களிடம் அகதிகளாகவும், சிலர் உயர் ஸ்தானிகராலயத்தில் அக திகளாகவும் வந்து சேர்ந்துள்ள னர். இவர்கள் அனைவரும் தாம் கொடுமைப்படுத்தப்பட்டுள்ள தாகத் தெரிவித்துள்ளனர்.

இது ஒரு புதுவிதமான சமூக பொருளாதார, கலாசார ஆக் கிரமிப்பு என பல விமர்சகர்கள் ஜப்பானைக் குற்றம் சாட்டியுள்ள னர்.



ஜப்பானியர்களும் இறக்கு மதி செய்யப்பட்ட அவர் களது பிலிப்பைன்ஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர் கடிதங்கள்

"நமது குரல்" வெளியீடு 13 தெளிவான எழுத்துக்களால் நிரம்பி, அரிய பல கருத்துக்கள் கொண்ட ஆக்கங்களைத் தாங்கி வந்தது கண்டு மனம் மகிழ்ந்தேன். தங்கள் சேவை தொடர வாழ்த்துகிறேன்.

— நாகலிங்கம் —

காகன்.

'நமது குரல் 13இல் பிரசுரமாகி இருந்த அதைவிட நன்று சிறுகதை இலட்சியப்படைப்பு. நடப்பில் நடந்து கொண்டிருக்கும் சம்பவத்தை ஜலியமாக காட்டியது. ஏமாறுபவர்கள் சமூகத்தில் இருக்கும் வரை ஏமாற்றுபவர்களும் வாழையடி வாழையாக முளைத்துக்கொண்டு இருப்பார்கள்தான். கதையில் கதாநாயகி (படித்தவள்) துணிச்சலுடனும் தன்னம்பிக்கையுடனும் புதிய வாழ்க்கை அமைக்க காலடி எடுத்து வைப்பது போன்று கதையை முடித்திருப்பது, நகைச்சுவையாகவும் சிந்திக்கவும் செய்கிறது.

— சிவா —

போகும்.

"நாம் சிறிது பேசுவோம்" ஆசிரியர் கருத்தில் "ஒன்று சேர்வோம்" தலையங்கம் விடுத்திருந்த அறைகூவலை எல்லோரும் செவிமடுத்தால், நிச்சயமாக ஒன்று சேர்ந்த அமைப்பு உருவாகும் என்பது எனது எண்ணம். ஒன்று சேர்ந்த அமைப்பின் மூலமாகத்தான் தமிழ் அகதிகளின் பிரச்சினைகளை வெளிக்காட்ட முடியும் என்பதனை குறிப்பிட்டிருந்தது உண்மைதான். இந்த அமைப்பு நாளடைவில் உலகத்தமிழர் அமைப்பாகவும் தோற்றம் பெறலாம். தமிழ் அகதிகள் இதன் கருத்தை உணர்ந்து செயற்பட்டால் உண்டு வாழ்வு என்பதனை நானும் வலியுறுத்துகிறேன்.

— செசந்திரன் —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கனடாவின் புதிய அகதிகள் சட்டம், கருப்பத்தடை மாத்திரை பாவனையின் பின் விளைவுகள் - பற்றிய கட்டுரைகள் எம்போன்ற பிற மொழியடிக்கத் தெரியாதவர்களுக்கு பல விடயங்களை தெளிவாக புரிய வைத்தது. இப்படியான பெருமதியான விடயங்களை இந்நாட்டில் வெளிவந்து கொண்டிருக்கும் தமிழ்ப் பிரசுரங்கள்தான் தொடர்ந்து அறியத் தரவேண்டும். இதன் மூலம் வதந்திகளை யதார்த்தமாக சிந்தித்து முடிவு எடுக்க முடியும். இதே போல் ஆர்வைற்சாம்ற், நோசல், அவுஸ்லண்டராம்ட் போன்ற விடயங்களின் சந்தேகங்களை தெளிவு படுத்துவது போல் விடயதானங்களும் அவ்வப்போது இடம் பெற்றால் என்ன!..

— மூர்த்தி —

முல்லைகம்.

---

விமர்சனங்கள் எழுதும் வாசகர்கள் தங்களது பெயரையும் முகவரியையும் குறிக்க தவற வேண்டாம். அவை இல்லாமல் வரும் விமர்சனங்கள் பிரசுரிப்பதற்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது, என்பதனை தயவுடன் நமது குரல் வேண்டுகிறது.

---

## ஹிட்லர் ஓவியம் ரூ. 28 லட்சம்!


ஹிட்லர் வரைந்த ஓவியம் ஒன்று சிலி நாட்டில் உள்ள சண்டியாகோ நகரில் ஏலம் விடப்பட்டது. அந்த ஓவியத்தை ஒரு தொழில் அதிபர் ரூ. 28 லட்சத்துக்கு ஏலம் எடுத்தார்.

ஆஸ்திரியாவில் உள்ள அமைதியான நகர்புறத்தை ஓவியமாக ஹிட்லர் தீட்டி இருந்தார். மேற்கு ஜெர்மனியின் சர்வாதிகாரி ஆவதற்கு 20 ஆண்டுகளுக்கு முன்பு 1910-ம் ஆண்டு ஹிட்லர் வரைந்த ஓவியம், இது.

ஓவியத்தின் வலதுபக்க கீழ்மூலையில் ஏ. ஹிட்லர் என்று கையெழுத்திடப்பட்டு உள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே.
ஆக்கங்களுக்கு அவற்றின் ஆக்கதாரர்களே பொறுப்பு

வாசிக்கத் தவறாதீர்கள்:.

சீதனச் சீர்கேடுகள், பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் என்பவற்றை எதிர்த்துச் செயற்படும் முற்போக்கு கொள்கை கொண்ட ஓர் இளைஞனின் கதை,

நாவல் உருவில் வெளிவந்துள்ளது

# அவன் காட்டிய வழி

- காசி -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நமது குரல்

இச்சஞ்சிகை மூன்றாம் உலக
நாடுகள், தகவல் நிலையத்தி-
னரின் உதவியுடன் மாத-
மொருமுறை இலவசமாக
வெளியிடப்படுகிறது

ஹேர்ண 'பெண்கள் வட்டம்' அமைப்பின்
சார்பில் வெளியிடப்படுகிறது.

**தொடர்புகளுக்கு:**

FRAUEN KREIS
INFORMATION ZENTRUM
DRITTE WELT
OVERWEG STR 31
4690 HERNE 1.
TELEFON: 02323 496970/74

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்